**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் - கூறு - II**

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் - கூறு - II இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முன்னாள் சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் தேசிய மட்டத்தில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த அதேநேரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் 2013-2017 வரையான ஆண்டு காலத்திற்காக தேசிய சுகாதார அபிவிருத்தி திட்டத்தை அமுலாக்குவதற்கான நிதி உதவியை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொடர்பில்லா தொற்றுநோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கான இயலுமைக்காக பொது சுகாதாரத்தின் செயலாற்றலின் நியமத்தை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,270 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியன் (ஐ.அ.டொலர் 200 மில்லியன்) ஆகும். அதில் ரூபா 1,263.5 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 6.5 மில்லியன் (ஐ.அ.டொலர் 10 மில்லியன்) செயற்திட்டத்தின் - கூறு- II இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தின் - கூறு- II இற்கான நிதிக்கூற்று என்பவற்றின் மீதான கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று

ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்)

கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஐ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருந்த ஏனைய கூற்றுக்களுடன் சேர்த்து காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1989 நவம்பர் 30 ஆந் திகதிய பிஎம்/பிஎஸ்/5 ஆம் இலக்க பிரதம அமைச்சர் அலுவலக சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சர்கள், அரச அதிகாரிகள் போன்றவர்கள் அலுவலக நோக்கங்களிற்கான வெளிநாட்டு விஜயங்களின் பின் நாட்டிற்கு திரும்பி ஏழு நாட்களுக்குள் அவர்களுடைய அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். எனினும் , 2015 பெப்ரவரி 22 இலிருந்து 27 வரை இந்தியாவில் இடம்பெற்ற நிர்வாகிகளிற்கான வைத்தியசாலை முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றிய 30 அலுவலர்களில் 16 அலுவலர்கள் அவர்களுடைய அறிக்கைகளை 2015 திசெம்பர் 31 இலும் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், பொது நிதித் திணைக்களத்தின் 2008 ஏப்ரல் 24 இன் 431 ஆம் இலக்க சுற்றறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக வெளிநாட்டு எயார்லைன் முகவரொருவரிடமிருந்து ரூபா 1.62 மில்லியன் கிரயத்தில் பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 835(2) (உ) க்கு முரணாக செயற்திட்ட கண்காணிப்பு பிரிவிற்காக 04 வருட குத்தகை அடிப்படையில் 2015 பெப்ரவரி 22 இல் கொழும்பு – 07 இல் அமைந்துள்ள அலுவலக கட்டடம் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டோ மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டோ இருக்கவில்லை. மேலும், அசாதாரண நிபந்தனையின் கீழ் செயற்திட்டம் குத்தகை வாடகையை செலுத்த இணங்கியிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகையால், ரூபா 3.84 மில்லியன் தொகையான குத்தகை வாடகைகள் முதல் 02 வருடங்களுக்காக குத்தகை காலத்தின் ஆரம்பத்தில் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்ததுடன் ஒரு வருடத்திற்காக வாடகையின் மொத்த பெறுமதிக்கு சமனான ரூபா 1.92 மில்லியன் மீளளிக்கப்படாத வைப்பு இடப்பட்டிருந்தது. மிகுதி குத்தகை தொகையான ரூபா 4.22 மில்லியன் முதல் 02 வருடங்களுக்கு ரூபா 80,000 மாதாந்த தவணைக்கட்டணங்களாகவும் அடுத்த 02 வருடங்களில் ரூபா 96,000 மாதாந்த தவணைக்கட்டணங்களாகவும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தால் பேணப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம், நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிகளின் பயன்பாடு என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | | | | | | | |
| கூறு-11 | 10 | 1263.50 | 200 | 0.25 | 32.08 | 0.28 | 35.50 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட காலத்தினுள் நிதியிடல் உடன்படிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதிகளின் பயன்பாட்டிற்காக விபரமான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட செயற்பாடுகளின் ஒவ்வொரு ஆண்டிற்குமான நடவடிக்கைகளின் அமுல்படுத்தலை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 200 மில்லியன் தொகை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 16.04 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 32.08 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் குறித்த நோக்கங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த ஒதுக்கீட்டை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை இது சுட்டிக்காட்டியுள்ளது.

(இ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,263.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் தொகை மொத்த ஒதுக்கீட்டில் 02½ வருடங்கள் கடந்த பின்னர் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஒதுக்கீட்டில் 2.8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 35.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.28 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், செயற்திட்டத்தின் மிகுதியாகவுள்ள 03 ஆண்டுகள் காலப்பகுதியின் போது முழு ஒதுக்கீட்டையும் பயன்படுத்தும் சாத்தியத்தன்மை ஐயத்திற்கிடமானதாகவுள்ளது.

3.2 **பௌதீக முன்னேற்றம்**

செயற்திட்டத்தின் கீழ் அடையப்பட வேண்டிய பௌதீக இலக்குகளானது இயலுமையை கட்டியெழுப்புதல், உதவிச் சேவைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என பெயரிடப்பட்ட 03 உபகூறுகளை அடிப்படையாகொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இலக்குகளின் அடைதல் மீதான அவதானிப்புக்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்திட்டமானது, சுகாதாரத்துறையின் கொள்கை தீர்மானங்களின் பயன்பாட்டிற்கான தரவுகளை சேகரிப்பதற்காக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்துடன் இணைந்து பிறப்பு இறப்பு சுகாதார அளவை ஒன்றினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2015 சனவரி 01 இலிருந்து 58 வாரங்களிற்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அளவையின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமானது ரூபா 44 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 329,783 ஆன வெளிநாட்டு ஆலோசனையாளர்களை வேலைக்கமர்த்துவதற்கான கிரயம் உள்ளடங்கலாக ரூபா 189.57 மில்லியன் தொகை ஆகும். மீளாய்வாண்டின் போது அளவைக்காக ரூபா 1.48 மில்லியன் கிரயத்தில் உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் 2015 திசெம்பர் 31 வரை அளவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இயலுமையை கட்டியெழுப்பலுக்கான பயிற்சி பட்டறையின் கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் விரிவான திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 527.74 மில்லியன் தொகையான ஒதுக்கீடும் கண்டுபிடித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கூறின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 345.72 மில்லியன் தொகையும் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்து 2½ வருடங்கள் கடந்த பின்னரும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 133(2) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் வரிசை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவால் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டமானது செயற்திட்டத்தினால் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகளை மேவுகை செய்திருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 756 இற்கு முரணாக ரூபா 1.74 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மீது வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.